**அளவுக்கூறுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் நிதியம் - 2019**

---

## 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

அளவுக்கூறுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் நிதியத்தின் (நிதியம்) 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் பொழிப்பாக்கப்பட்ட முக்கியமான கணக்கீட்டு கொள்கைகள் உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கங்களைத் தவிர்த்து நிதியத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.2 முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அவ் நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

## 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, நிதியம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது நிதியத்தினை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு நிதியம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

**1.4 கணக்காய்வின் நோக்கெல்லை (நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு)**

---

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்,

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது கூட்டுச்சதி, கள்ளத்தனம், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய

தொடர்ந்து செயற்படுவதற்கு நிதியத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியனவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கம்பனியின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாகவும் அவசியமானதுமானதாகவும் கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- நிதியத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- நிதியம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்தனவா என்பதும், மற்றும்

- நிதியத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள்

### 1.5.1 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு மீதான உள்ளகக் கட்டுப்பாடு

கொடுக்கல் வாங்கல்கள் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அங்கீகாரத்துடன் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் பொருத்தமான அறிக்கையிடல் நியமங்களிற்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்படுவதை அனுமதிப்பதற்கும் சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பை பேணுவதற்கும் தேவையானவாறு கொடுக்கல் வாங்கல்கள் பதிவு செய்யப்படுகின்றன என்றும் முகாமைத்துவத்தின் பொதுவான அல்லது குறித்துரைக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம் மாத்திரமே சொத்துக்களை அணுகுவதற்கு அனுமதிக்கப்படுகின்றது என்றும் பதிவு செய்யப்பட்ட சொத்துக்களிற்கான கணக்களிப்பொறுப்பு ஏற்கனவேயுள்ள சொத்துக்களுடன் நியாயமான கால இடைவெளிகளில் ஒப்பீடு செய்யப்படுகின்றன என்றும் ஏதாவது வேறுபாடுகள் தொடர்பாக பொருத்தமான

நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்றும் நியாயமான உறுதிப்பாட்டை வழங்குவதற்கு போதுமான உள்ளகக் கணக்கீட்டுக் கட்டுப்பாட்டு முறைமையொன்றை "திட்டமிட்டு பேணுதல்" நிறுவனங்களிற்கு அவசியமாக உள்ளது. பொதுப் பேரேடு, நாட்குறிப்புக்கள் மற்றும் நாட்குறிப்பு உறுதிச்சீட்டுக்கள், கொடுப்பனவு உறுதிச்சீட்டுக்கள் போன்ற பிரதான கணக்கீட்டுப் பதிவேடுகளை பேணுவது தொடர்பான விடயங்கள் இத்தலைப்பின் கீழ் உள்ளடக்கப்படலாம்.

### 1.5.2 இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமங்களுடனான தொடர்புடைய இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியமம் 01 இன் 53 ஆம் பந்தியின் பிரகாரம் நிதிக் கூற்றுக்களில் அறிக்கையிடும் அனைத்து ஒப்பீட்டு தகவல்களும் முன்னைய காலப்பகுதியின் ஒப்பீட்டு தகவல்களுடன் வெளிப்படுத்தபப்ட வேண்டிய போதிலும் நிதிக்கூற்றுக்களுக்கு குறிப்புக்களாக சமர்ப்பிக்கப்பட்ட ஒப்பீட்டுப் பெறுமதிகள் தொடர்பாக முன்னைய ஆண்டின் ஒப்பீட்டுப் பெறுமதிகள் சமர்ப்பிக்கப்படவில்லை. | 2020 ஆம் ஆண்டு முதல் நிதிக் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள் முன்னைய ஆண்டுடன் ஒப்பீட்டு ரீதியாக சமர்ப்பிக்க தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாக அறிய தருகின்றேன். | நிதிக் கூற்றுக்களில் அறிக்கையிடும் அனைத்து ஒப்பீட்டு தகவல்களுடன் முன்னைய காலப்பகுதியின் ஒப்பீட்டுத் தகவல்களுடன் வெளிப்படுத்தப்பட வேண்டும். |
| (ஆ) | இலங்கை பொதுத்துறை கணக்கீட்டு நியம இலக்கம் 1 நியமத்தின் 48 ஆம் பந்தியின் பிரகாரம் வருமானம் மற்றும் செலவினங்கள் ஈடுசெய்யப்படக் கூடாத போதிலும் காப்புறுதி இழப்பீடாக கிடைத்த ரூபா 74,300 தொகை ஏனைய உடன்படிக்கை சேவை செலவினங்களிலிருந்து ஈடு செய்யப்பட்டிருந்தது. | வாகன விபத்துக் காப்புறுதி இழப்பீட்டு பெறுவனவுகள் வைப்புக் கணக்கினூடாக மேற்கொள்ள தேவையான நடவடிக்கை எடுக்கப்படும் | வருமானம் மற்றும் செலவின ஈடுசெய்யப் படக்கூடாது. அத்துடன் ரூபா 74,300 காப்புறுதி இழப்பீட்டுப் பெறுவனவு வருமானமாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |

### 1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஆண்டின் ஆரம்பத்தில் அட்டுறு செலவினமாக ரூபா 877,111 செலவினம் கணக்குகளில் செலவு கைக்கப்பட்ட காரணத்தினால் மீளாய்வாண்டின் செலவினம் அப்பெறுமதியால் குறைத்துக் காட்டப்பட்டிருந்தன. | செலவினக் கணக்குகளில் ஆரம்ப மீதிகள் (அட்டுறுவாக செலவினம்) காண்பிக்கப்பட்டமை கணக்கீட்டு கோட்பாடு களுக்கு முரணானது என்பதை ஏற்றுக் கொள்கின்றேன். அதனை 2020 ஆம் ஆண்டின் நிதிக் கூற்றுக்களைத் தயாரிக்கும் | செலவினக் கணக்குகளில் ஆரம்ப மீதி பதிவு செய்யக்கூடாது |

| | | | |
|---|---|---|---|
| | | போது சீர் செய்வதாக நடவடிக்கை எடுப்பதாக அறிய தருகின்றேன். | |
| (ஆ) | திறைசேரிக்குச் செலுத்த வேண்டிய வருமானம் நிதி நிலைமைக்கூற்றில் ரூபா 60,544,826 ஆக இருந்த போதும் சமர்ப்பிக்கப்பட்ட பேரேட்டின் பிரகாரம் செலுத்த வேண்டிய மீதி ரூபா 60,450,671 ஆக இருந்தது. இதன் காரணமாக பொறுப்புக்களின் பெறுமதி ரூபா கூடுதலாக காட்டப்பட்டிருந்தது. | இந்த ரூபா 94,155 ஆன வேறுபாடு 2019 சனவரி 01 இல் உள்ளவாறு செலுத்த வேண்டியதாக உள்ளதுடன் அவ்வேறுபாட்டை மேலும் ஆராய்ந்து சீராக்குவதற்கு நடவடிக்கை எடுக்கின்றேன். | நிதிக்கூற்றுக்களில் பொறுப்புக்கள் பெறுமதி சரியாக காண்பிக்கப்பட வேண்டும். |
| (இ) | 2015 ஆம் ஆண்டு வரை நிலையான சொத்துக்களுக்காக பெறுமானத்தேய்வு சீராக்கம் சொத்துக் கணக்கில் மேற் கொள்ளப்பட்ட காரணத்தினால் பெறுமானத்தேய்வு ஒதுக்கக் கணக்குகளில் ஆரம்ப மீதிகள் பதிவு செய்யப்படாதிருந்ததால் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு திரண்ட பெறுமானத் தேய்வாக நிதிக் கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட பெறுமதி சரியானதாக இருக்கவில்லை. | இது தொடர்பாக ஆராய்ந்து தேவையான சீராக்கங்களை 2020 நிதிக்கூற்றுக்களை தயாரிக்கும் மேற் கொள்வதாக அறிய தருகின்றேன். | நிதிக்கூற்றுக்களில் சரியான திரண்ட பெறுமானத் தேய்வினை காண்பிக்க வேண்டும். |
| (ஈ) | நிதிக்கூற்றுக்களில் முதலீட்டு வருமானம் ரூபா 96,171 ஆல் குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | உள்ளவாறாக கிடைத்த வட்டி பரீட்சிக்கப்பட்டு தேவையான சீராக்கங்கள் மேற்கொள்வதாக அறிய தருகின்றேன். | நிதிக்கூற்றுக்களில் சரியான முதலீட்டு வருமானத்தினை காண்பிக்க வேண்டும். |
| (உ) | மீளாய்வாண்டின் போது கொள்வனவு செய்த ரூபா 263,819 ஆன அலுவலக உபகரணங்கள் அவ்வாண்டிலேயே முழுமையாக பெறுமானத் தேய்வு செய்யப்பட்டதால் பெறுமானத்தேய்வு ஒதுக்கீடு மற்றும் பெறுமானத்தேய்வு ரூபா 237,437 ஆல் கூடுதலாக நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டிருந்தது. | அது 2020 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களில் இத்தவறினை சீராக்க நடவடிக்கை எடுக்கின்றேன். | நிதிக்கூற்றுக்களில் சரியான பெறுமானத் தேய்வினை காண்பிக்க வேண்டும். |
| (ஊ) | முன்னைய ஆண்டில் நிதிக் கூற்றுக்களில் முன்கொண்டு வரப்பட்ட செலவினம் ரூபா 600,899 மீளாய்வாண்டின் | முன்னைய ஆண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறு முன்கொண்டு வரப்பட்ட செலவினம் ரூபா | முன்னைய ஆண்டில் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்ட செலவினம் மீளாய்வாண்டின் |

| | | | |
|---|---|---|---|
| | செலவினமாக கணக்கீடு செய்யப்படாமை காரணமாக அப்பெறுமானத்தினால் செலவினம் குறைத்து காண்பிக்கப்பட்டிருந்தது. | 600,899 ஆக இருந்தது. இது உரிய கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டிருந்த போதும் உரிய செலவினக் கணக்கிற்கு வரவு வைக்க முடியாதிருந்தது. அத்தவறினை திருத்த நடவடிக்கை எடுக்கின்றேன். | செலவினமாக கணக்கீடு செய்யப்பட வேண்டும். |
| (எ) | 04 கணக்கு விடயங்களுக்குரிய பேரேடுகளின் கூட்டல் தவறுகள் காரணமாக ரூபா 77,112 ஆன செலவினம் கூடுதலாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இத்தவறினை அடுத்த ஆண்டின் நிதிக கூற்றுக்களில் சீராக்குவதாக அறிய தருகின்றேன். | பேரேடுகளில் கூட்டல் சரியாக காட்டப்பட வேண்டும் |
| (ஏ) | மீளாய்வாண்டின் போது ரூபா 10,348,640 ஆன மூலதன கொள்வனவு வருமானச் செலவினமாக கணக்கீடு செய்யப்பட்டிருந்தது. | இத்தவறினை அடுத்த ஆண்டின் நிதிக் கூற்றுக்களில் சீராக்குவதாக அறிய தருகின்றேன். | மூலதனச் செலவினம் வருமானச் செலவினம் என வேறாக குறிப்பிட வேண்டும் |
| (ஏ) | நிதிக்கூற்றுக்களில் கிடைக்க வேண்டிய நிலையான வைப்புக்கள் வட்டி ரூபா 208,044 குறைத்து குறைத்துக் காண்பிக்கப்பட்டிருந்தது. | வேறுபாட்டை 2020 ஆம் ஆண்டின் சீராக்குவதாக அறிய தருகின்றேன். | நிதிக்கூற்றுக்களில் சரியாக பெறவேண்டிய நிலையான வைப்பு வட்டி காண்பிக்கப்பட வேண்டும் |

**1.5.4 இணக்கம் செய்யப்படாத கட்டுப்பாட்டுக் கணக்குகள்**

| | விடயம் | நிதிக் கூற்றுக் களின் பிரகாரம் பெறுமதி | அண்மித்த அறிக்கைகளின் பிரகாரம் பெறுமதி | வேறுபாடு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | பரிந்துரை |
|---|---|---|---|---|---|---|
| | | ரூபா | ரூபா | ரூபா | | |
| (அ) | எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கி செலவினம் | 209,854 | 289,854 | 80,000 | 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு அட்டுறு எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கிகள் ரூபா 289,854 ஆக இருந்துடன் அது எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கி கணக்கில் ரூபா 209,854 என தவறாக பதிவு செய்யப்பட்டுள்ளது. | நிதிக்கூற்றுக்களில் எரிபொருள் மற்றும் உராய்வு நீக்கி செலவின பெறுமதி காண்பிக்கப்பட வேண்டும். உட்படுத்தப்பட வேண்டும் |
| (ஆ) | முத்திரை இடல் வருமானம், பிரயாண செலவினம் மற்றும் மேலதிகநேர படிகள் | 253,216,548 | 253,169,409 | 47,139 | முத்திரை இடல் வருமானம், பிரயாண செலவினம் மற்றும் மேலதிகநேர படிகள் என்பவற்றில் | நிதிக் கூற்றுக்களில் சரியான முத்திரை இடல் வருமானம், பிரயாண |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | பேரேட்டின் பிரகாரம் மீதி சரியாக இருப்பதுடன் பரீட்சை மீதிக்கு பதிவு செய்யும் போது தவறு ஒன்றினால் அப் பெறுமதிகள் மாற்றமடைந்துள்ளதாக குறிப்பிடுகின்றேன். | செலவினம் மற்றும் மேலதிகநேர படிகள் பெறுமதி காண்பிக்கப்பட வேண்டும். |
| (இ) | முத்திரை இடல் வருமானங்களிலிருந்து திறைசேரிக்கு செலுத்த வேண்டிய வருமானக் கணக்கிற்கு மாற்றுதல் | 118,057,633 | 118,278,216 | 220,583 | ஒவ்வொரு மாதத்திற்குரிய அளவீட்டு சேவைகள் தந்திரோபாய பரிசோதகர்களால் சேகரிக்கப்படும் முத்திரையிடல் வருமானம் கணக்கிடப்பட்டுள்ளன. எனினும் பின்னர் அவ்வருமானத்தை வங்கியிலிடல் மற்றும் அவ்வருமான அறிக்கை பரீட்சிக்கப்பட்டதால் சில வேறுபாடுகள் இனங்காணப்பட்டதுடன் அதன் பிரகாரம் வேறுபாட்டை சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனினும் அங்கு வருமானமாக இனங் காணப்பட்ட வருமானத்தில் 1/3 திறைசேரிக்கு மீண்டும் அனுப்புவதற்கு நடவடிக்கை எடுக்கப்படவில்லை என அறிய தருகின்றேன். | முத்திரை இடல் வருமானங்கள் தவிர ஏனைய வருமானங்களிலிருந்து திறைசேரிக்கு செலுத்த வேண்டிய வருமானக் கணக்கிற்கு சரியான பெறுமதி மாற்றப்பட்டு நிதிக்கூற்றக்களில் காண்பிக்கப்பட வேண்டும். |
| (ஈ) | முத்திரை இடல் வருமானங்கள் தவிர ஏனைய வருமானங்களிலிருந்து திறைசேரிக்கு செலுத்த வேண்டிய வருமானக் கணக்கிற்கு மாற்றுதல் | 2,832,719 | 2,107,197 | 725,522 | உபகரண அளவு மற்றும் மாதிரகளை அங்கீகரிக்கும் போது குறித்த கட்டணங்களுக்கு மேலதிகமாக எரிபொருள் மற்றும் உத்தியோகத்தர்களின் பிரயாணச் செலவினத்திற்காக கட்டணங்களும் உரிய நிறுவனங்களிடமிருந்து | முத்திரை இடல் வருமானங்கள் தவிர ஏனைய வருமானங்களிலிருந்து திறைசேரிக்கு செலுத்த வேண்டிய வருமானக் கணக்கிற்கு சரியான பெறுமதி மாற்றப்பட்டு நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட வேண்டும். |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | அறவிடப்படுகின்றன. எரிபொருள் மற்றும் பிரயாண செலவினங்களில் 2/3 குறித்த எரிபொருள் மற்றும் பிரயாண செலவினக் கணக்குகளுக்கு செலவு வைக்கப்பட்டுள்ளதுடன் எஞ்சிய 1/3 திறைசேரிக்கு செலுத்த வேண்டிய 1/3 கணக்கிற்கு செலவு வைக்கப்பட்டுள்ளது. | |
| (உ) | காசுப் பாய்ச்சல் கூற்றில் பதிவு செய்யப்பட்டிருந்த | | | | | |
| (i) | வருமானப் பெறுவனவு | 341,580 | 228,720 | 112,860 | அதனை சீராக்க நடவடிக்கை எடுக்கின்றேன் | காசுப் பாய்ச்சல் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள வருமானப் பெறுவனவு பெறுமானங்கள் காசேட்டில் காண்பிக்கப்பட்ட பெறுமதிகளுடன் இணங்க வேண்டும். |
| (ii) | ஏனைய வருமானம் | 104,482 | 92,537 | 11,945 | காசுப் பாய்ச்சல் கூற்றில் ஏனைய வருமானங்களின் வேறுபாடு ரூபா 11,945 தேடி பார்த்து சீராக்க தேவையான நடவடிக்கை எடுக்கப்பட்டது. | காசுப் பாய்ச்சல் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய வருமானப் பெறுவனவு பெறுமதி காசேட்டில் காண்பிக்கப்பட்ட பெறுமதிகளுடன் இணங்க வேண்டும். |
| (iii) | மீண்டெழும் செலவினம் | 80,162,905 | 81,746,959 | 1,584,054 | காசுப் பாய்ச்சல் கூற்றின் பிரகாரம் வருமானப் மீண்டெழும் செலவினங்கள் மற்றும் காசேட்டின் பிரகாரம் ரூபா 1,584,054 ஆன வேறுபாடொன்று உள்ளதாக ஏற்றுக் கொள்கின்றேன். 2020 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்களை | காசுப் பாய்ச்சல் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள மீண்டெழும் செலவினங்கள் காசேட்டில் காண்பிக்கப்பட்ட பெறுமதிகளுடன் இணங்க வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | | | | தயாரிக்கும் போது சீராக்குவதாக அறிய தருகின்றேன். | |
| (iv) மனித வள அபிவிருத்தி செலவினங்கள் | 1,661,865 | 1,515,982 | 145,883 | மனித வள அபிவிருத்தி செலவினங்களில் ரூபா 145,883 ஆன வேறுபாடொன்று உள்ளதாக ஏற்றுக் கொள்கின்றேன். காசேட்டின் பிரகாரம் மனித வள அபிவிருத்தி செலவினம் ரூபா 1,515,982 ஆக இருந்ததுடன் அது காசுப்பாய்ச்சல் கூற்றில் காண்பிக்கப்பட வேண்டுமென அறிய தருகின்றேன் | காசுப் பாய்ச்சல் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள மனித வள அபிவிருத்தி செலவினங்கள் காசேட்டில் காண்பிக்கப்பட்ட பெறுமதிகளுடன் இணங்க வேண்டும். |
| (v) நிலையானவைப்பு வட்டி | 44,919,284 | 44,876,284 | 43,000 | வேறுபாடு 2020 ஆம் ஆண்டின் போது சீராக்குவதாக அறிய தருகின்றேன். | காசுப் பாய்ச்சல் கூற்றில் குறிப்பிடப்பட்டுள்ள நிலையான வைப்பு வட்டி பெறுவனவுகள் காசேட்டில் காண்பிக்கப்பட்ட பெறுமதிகளுடன் இணங்க வேண்டும். |

**1.5.5 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை**

| கிடைக்கப் பெற்ற விடயம் | தொகை | கணக்காய்வு சான்றுகளின்மை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| | ரூபா | | | |
| (அ) நிலையான சொத்துக்கள் | 200,201,455 | விரிவான அட்டவணை | இதற்காக விரிவான அட்டவணையொன்று தயாரித்து கணக்காய்விற்கு சமர்ப்பிக்கின்றேன். | ரூபா 200,201,485 ஆன நிலையான சொத்துக்கள் மீதியை உறுதிப்படுத்துவதற்கு தேவையான விரிவான அட்டவணை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| (ஆ) | நிலையான சொத்துக்களுக்கான பெறுமானத்தேய்வு | 59,649,906 | விரிவான அட்டவணை | இதற்காக விரிவான அட்டவணையொன்று தயாரித்து கணக்காய்விற்கு சமர்ப்பிக்கின்றேன். | ரூபா 59,649,906 ஆன நிலையான சொத்துக்கள் பெறுமானத் தேய்வினை உறுதிப்படுத்துவதற்கு தேவையான விரிவான அட்டவணை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டும். |

**1.6 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் போன்றவற்றுடன் இணங்காமை**

| சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| 1995 இன் 35 ஆம் இலக்க அளவுக் கூறுகள், நியமங்கள் மற்றும் சேவைகள் அதிகாரச்சட்டத்தின் 20(1)(அ) மற்றும் 37 ஆம் பிரிவு | வியபாரத்தில் பயன்படுத்தப்படும் அனைத்து அளவீட்டு உபகரணங்களும் வருடாந்தம் மெய்மையாய்வு செய்யப்பட வேண்டிய போதிலும், அந்த அனைத்து உபகரணங்களும் சரிபார்க்கப்பட்டிருந்தமையை உறுதிப்படுத்துவதற்கு முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இது தொடர்பாக 2017-2019 காலப்பகுதியில் தொகை மதிப்பு புள்ளி விபரவியல் திணைக்களத்துடன் இணைந்து தேவையான திட்டங்கள் மற்றும் தரவுகளை பதிவு செய்து தகவல் முறைமை யொன்றை தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. எனினும் 2019 ஆம் ஆண்டின் போது தொகை மதிப்பு புள்ளிவிபர திணைக்ககம் இதனை மேற்கொள்ள முடியாதென அறிவித்திருந்தது. | வியாபாரத்தில் பயன்படுத்தப்படும் எல்லா அளவீட்டு கருவிகளையும் வருடாந்தம் மெய்மையாய்வு செய்வதற்கு முறையான நடைமுறையொன்று நிதியத்தில் ஸ்தாபிக்கப்பட வேண்டும். |

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டின் செயற்பாட்டு விளைவு ரூபா 117,656,729 ஆன மிகையாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகை ரூபா 117,075,486 ஆக இருந்தது. அதன் பிரகாரம் நிதி விளைவுகளில் ரூபா 581,243 தொகையான அதிகரிப்பொன்று அவதானிக்கப்பட்டது. இவ்வதிகரிப்பிற்கு ஆதனங்கள், பொறி இயந்திர உபகரணங்களின் பெறுமானத்தேய்வு, பராமரிப்புக் செலவினங்கள், பங்களிப்புத் தொகை மற்றம் அங்கத்தவர் கட்டணங்கள் என்பன முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் போது வீழ்ச்சிக்கான பிரதான காரணங்களாகும்.

**3. செயற்பாட்டு மீளாய்வு**

**3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) நிதியத்தின் நடைமுறைக் கணக்கில் மீள்ாயவர்ணடின சனவரி முதல் திசெம்பர் வரை ரூபா 194 மில்லியன் முதல் ரூபா 365 மில்லியனுக்கு இடைப்பட்ட வீச்சில் மீதியென்று பேணிச்செல்லப்பட்டிருந்ததுடன் இம்மீதி நிதியத்தின் மாதாந்த தேவைப்பாடு மற்றும் உடன் ஒப்பிடும் போது 85 சதவீதத்திற்கு மேற்பட்ட மிகை தொகையான்றாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. இம்மிகை மீதியை முதலீடு செய்து வட்டியை உழைப்பது தொடர்பில் முகாமைத்துவத்தின் கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை. | நிதியத்திற்குரிய நடைமுறைக் கண்கில் உள்ள பண மீதியை சாதாரண சேமிப்புக் கணக்கொன்று திறக்கப்பட்டு அக்கணக்கிற்கு மாற்றுவதற்கும் மாதாந்த செலவின தேவைப்பாடு இனங்காணப்பட்டு மேலும் காணப்படும் மிகை பணத்தை நிலையான வைப்புக்களில் முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. அம்முதலீடுகளை மேற்கொண்டு உரிய சான்றுகளை கணக்காய்விற்கு சமர்ப்பிக்குமாறு அறிய தருகின்றேன். | மிகை பணத்தை முதலீடு செய்து வட்டி வருமானத்தை உழைப்பது தொடர்பில் முகாமைத்துவத் தின் கவனம் செலுத்தப்பட வேண்டும். |
| (ஆ) மாவட்ட அலுவலர்களினால் பரிசோதிக்கப்பட்ட அலகுகள் மற்றும் அது தொடர்பான கட்டணங்களை அறவிட்டு கொள்வது தொடர்பான தகவல் அறிக்கைகள் உத்தியோகத்தரினால் நிதியத்திற்கு அறிக்கையிட ப்பட்டிருந்த போதிலும் அதன் உண்மைத்தன்மையை உறுதிப்டுத்தற்கான தரவுகள் அல்லது உரிய செயன்முறைகள் நிதியத்திடம் காணப்படவில்லை. | ஆய்வுகள் தொடர்பாக அறவிடப்படும் வருமானங்கள் தொடர்பான வருமானக்கூற்று அறிக்கையானது மாவட்ட அளவுக்கூறுகள், விஞ்ஞானப் பரிவின் பொறுப்பான உத்தியோகத்தரால் மாதாந்தம் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படுவதுடன் திணைக்களத்தின் கணக்குப் பிரிவுகள் மூலம் உண்மைத் தன்மையை பரிசோதிக்கப்பட்டு கணக்கீடு செய்யப்படும். வங்கி இணைக்கக்கூற்று தயாரிக்கும் போது உழைக்கப்பட்ட நிதி உரிய முறையில் வங்கியில் வைப்பிலிடப்பட்டுள்ளதா என்பதனை பரிசோதனை உட்படுகின்றது. | மாவட்ட அதிகாரியினால் இணக்கம் செய்யப்பட வேண்டிய அலகுகள் மற்றும் அது தொடர்பான அறவிடப்படும் வருமானம் தொடர்பான உண்மைத் தன்மையை உறுதிப்படுத்திக் கொள்வதற்கான தரவு முறைகள் மற்றும் செயன்முறைகள் உருவாக்கப்பட வேண்டும். |
| (இ) அளவீட்டுக் கூறுகள் உபகரணங்கள் மற்றும் பயன்படுத்தும் உற்பத்தியாளர்கள், திருத்தம் செய்வோரை பதிவு செய்வதாக 600 அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு 2019 ஆம் ஆண்டில் வழங்குவதற்கு இலக்கிடப்பட்டிருந்ததுடன் 548 அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன. | 2019 ஆம் ஆண்டிற்காக அளவீட்டுக் கூறுகள் உபகரணங்களை பயன்படுத்துவோர் உற்பத்தியாளர்கள் திருத்தம் செய்வோர் போன்றோரை பதிவு செய்யும் அனுமதிப்பத்திரங்கள் 600 ஐ வழங்குவதற்கு இலக்கிடப்பட்டிருந்ததுடன் 548 | இலக்கிடப்பட்ட வருமானத்தை உழைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அனுமதிப்பத்திரங்கள் வழங்கப்பட்டிருந்தன. | |
| (ஈ) | மீளாய்வாண்டில் 22165 போலி அளவுக்கூறு கூற்றி வளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருந்ததுடன் வெற்றிகரமான சுற்றிவளைப்புக்கள் 1514 ஆக இருந்தன. தண்டப்பணமாக ரூபா 2,855,350 ஆன வருமானமொன்று உழைக்கப்பட்டிருந்தது, மேலும் முல்லைதீவு மன்னார் மாவட்டங்களில் எவ்வித சுற்றி வளைப்புக்கள் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை. | முல்லைதீவு மன்னார் மாவட்டங்களில் அறிவூட்டும் நிகழ்ச்சித்திட்டங்கள் மாத்திரம் நடாத்தப்பட்டதுடன் சில அறிவூட்டல் சுற்றிவளைப்பாக மேற்கொள்ளப்பட்டுள்ளது. இந்த ஆண்டு முதல் இந்த 02 மாவட்டங்களிலும் சுற்றி வளைப்புக்கள் மேற்கொள்ளப்படுவதாக அறிய தருகின்றேன். வெற்றிகரமான சுற்றி வளைப்புகள் என்பது போலி அளவை சுற்றி வளைப்புக்கள் மேற்கொண்டு தண்டப்பணம் அறவிடப்பட்ட சுற்றிவளைப்பு களாகும். மேற்கொள்ளப்பட்ட அனைத்து சுற்றி வளைப்புக்களும் வெற்றிகரமான சுற்றி வளைப்புக்கள் அல்ல என அறிய தருகின்றேன். | அனைத்து மாவட்டங்களும் மேவுகை செய்யப்பட வேண்டும். |

## 3.2 செயற்திட்டங்களை நிறைவேற்றவதில் தாமதம்

புதிய ஆய்வுகூடத்தின் காற்றுச்சீராக்கல் முறைமையொன்றை பொருத்துவதற்காக ரூபா 995நிதி ஏற்பாடு மீளாய்வாண்டில் ஒதுக்கீடு செய்யப்பட்ட போதும் 2020 மே 25 ஆந் திகதி வரையிலும் அந்நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கணக்காய்வு குழு

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தினால் மீளாய்வாண்டிற்காக கணக்காய்வு குழு ஸ்தாபிக்கப்பட்டு கணக்காய்வு குழுக் கூட்டங்கள் நடாத்தப் பட்டிருக்கவில்லை. அத்துடன் நிதியத்தின் நடவடிக்கைகளையும் தொடர்ச்சியான அடிப்படையில் மீளாய்விற்கு உட்படுத்தியிருக்கவில்லை. | இத்திணைக்களத்திற்கு உள்ளகக் கணக்காய்வாளர் 2019 செப்தம்பர் 01 அந் திகதியே வருகை தந்திருந்தார். எனினம் திணைக்களத்தின் உள்ளக கணக்காளர் பதவி வெற்றிடமாக இருந்தது, கணக்காய்வு மற்றம் முகாமைத்துவக் குழு கூட்டங்களின் அழைப்பாளராக உள்ளகக் கணக்காய்வாளர் செயற்படுவதுடன் 2020 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழு கூட்டத்தை நடாத்துவதற்கு | மீளாய்வாண்டிற்காக கணக்காய்வுக் குழு ஸ்தாபிக்கப்பட்டு கணக்காய்வு குழுக் கூட்டங்களை நடாத்தி நிதியத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மீளாய்விற்கு உட்படுத்த வேண்டும். |

| | | |
|---|---|---|
| | திட்டமிடப்பட்டிருந்த போதும் கெரோனா வைரஸ் காரணமாக அதனை நடாத்த முடியாமல் போனதாக அறிய தருகின்றேன். 2020 ஆம் ஆண்டின் முதலாவது கணக்காய்வு மற்றம் முகாமைத்துவக் குழு கூட்டம் 2020 யூலை 14 ஆந் திகதி நடாத்த திட்டமிடப்பட்டுள்ளது. | |

**4.2 பாதீட்டுக் கட்டுப்பாடு**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| எழுதுகருவிகள் மற்றும் அங்கத்தவர் கட்டணங்கள், இயந்திரங்கள் மற்றும் இயந்திராதிகள், கட்டிட நிர்மாணங்கள், அறிவு மேம்பாடு மற்றும் நிறுவன அபிவிருத்திக்காக மதிப்பிடப்பட்ட செலவினம் மற்றும் உள்ளவாறான செலவினங்களுடன் ஒப்பிடும் போது முறையே 45 சதவீதம், 60 சதவீதம், 68 சதவீதம், 97 சதவீதம், 83 சதவீதம் மற்றும் 60 சதவீதம் என நிதி ஏற்பாடுகள் சேமிக்கப்பட்டுள்ளதால் இதன் மூலம் நிதியத்தின் செலவின முகாமைத்துவத்தில் பலவீனங்கள் அவதானிக்கப்பட்டன | மீளாய்வாண்டிற்கான பாதீட்டு மதிப்பீடு அதற்கு முன்னைய ஆண்டின் போது தயாரிக்கப் பட்டதுடன் மீளாய்வாண்டில் நடவடிக்கைகளை மேற்கொள்ளும் போது சில செலவினங்களுக்காக நிதிஏற்பாடு போதியளவில் இல்லாமல் இருந்ததுடன் பாதீட்டு மதிப்பீடு திருத்தம் செய்யப்பட்டதாக அறிய தருகின்றேன். | நிதியத்தின் செலவினங்களை முறையாக முகாமை செய்ய வேண்டும். |